# வடக்கு மாகாண கல்வி அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டம் 2015

## 2015/07

**இடம்** : வடக்கு மாகாண கல்வி அமைச்சின் மாநாட்டு மண்டபம்

**காலம்** :- 22.12.2015 (செவ்வாய்க் கிழமை) காலை 09.30 மணி

**சமுகமளித்த கல்வி ஆலோசனைக் குழுவினர் :-**

- கௌரவ கல்வி அமைச்சர் திரு.த.குருகுலராசா (தலைவா)
- திரு.பா.கஜதீபன் – கௌரவ வடக்கு மாகாண சபை உறுப்பினர்
- திரு.இ.இந்திரராசா – கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- திரு.சி.அகிலதாஸ் – கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்.

**சமுகமளித்த ஏனையோர்**

- திரு.எம்.பி.நடராஜ் – கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- திரு.க.தருமலிங்கம் – கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- திரு.அன்ரனி ஜெகநாதன் – கௌரவ வடக்கு மாகாணசபை பிரதி அவைத் தலைவர்
- திரு.க.வ.கமலேஸ்வரன்– கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- திரு.T.லிங்கநாதன் – கௌரவ வடக்கு மாகாண சபை உறுப்பினர்.
- திரு.ம.தியாகராசா – கௌரவ வடக்கு மாகாண சபை உறுப்பினர்.
- கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் – கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- திரு.வே.சிவயோகன் – கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- திரு.ச.சுகிர்தன் – கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- திரு.ப.அரியரத்தினம் – கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- திரு.தர்மபால – கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- திரு.ஆ.சி.து.ரவிகரன் – கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- திரு.எம்.கே.சிவாஜிலிங்கம் – கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- திருமதி.அனந்தி சசிதரன் – கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- திரு.ஜெயதிலக – கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- திரு.இ.இரவீந்திரன் – செயலாளர், கல்வி அமைச்சு, வடக்கு மாகாணம்.
- திரு.எஸ்.உதயகுமார் – மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணம்.
- எந்திரி.தே.சுரேஸ்குமார்,பாடசாலை வேலைகள் பணிப்பாளர், கல்வி அமைச்சு,வ.மா.
- திரு.ஆ.க.சண்முகநாதன் – கல்வி அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர்.
- திரு.மா.தேவேந்திரன் – பிரதிக் கல்விப் பணிப்பாளர்(நிர்வாகம்), மா.க.அமைச்சு
- திரு.கே.முகுந்தன் – விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர், விளையாட்டுத் திணைக்களம்.
- திரு.தி.ஞானசுந்தரன் – பிரதிக் கல்விப் பணிப்பாளர்(திட்டமிடல்), மா.க.அமைச்சு
- திருமதி.பா.அபிராமி – உதவிச் செயலாளர் ,கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- திரு.K.குருபரன் – பணிப்பாளர், விளையாட்டுத் திணைக்களம்.
- திரு.G.அற்புதராஜ் – கலாச்சாரத் தணைக்களம், வடமாகாணம்.

கௌரவ கல்வி அமைச்சர் அவர்கள் ஏழாவது கல்வி ஆலோசனைக் குழுக் கூட்டத்திற்கு சமுகமளித்தவர்களை வரவேற்று கூட்டத்தை ஆரம்பித்தார்.

- **பாடசாலை தரமுயர்த்தல்**
  1. மன்/முன்றாம்பிட்டி அ.த.க. பாடசாலை தரம் 10 ஆம் 11 ஆம் வகுப்புகள் ஆரம்பித்தல் – அறிக்கை கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டது.
  2. வ/செக்கட்டிப்புலவு அ.த.க. பாடசாலை தரம் 10 ஆம் 11 ஆம் வகுப்புகள் ஆரம்பிக்க அனுமதி வழங்குமாறு கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு.எம்.பி.நடராஜ் அவர்கள் கேட்டுக் கொண்டார்.
  3. வ/சமளங்குளம் அ.த.க. பாடசாலையில் தரம் 06 ஆரம்பிக்க அனுமதி வழங்குமாறு கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு.ரி.லிங்கநாதன் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

- **மீள ஆரம்பித்தல்**
  1. யா/காரைநகர் இலகடி சைவத் தமிழ்ப் பாடசாலை – அறிக்கை கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

- **வேறு விடயங்கள்**
  1. தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையினை நடாத்துதல் தொடர்பான தீர்மானத்தினை மத்திய அரசாங்கம் மீளாய்வு செய்ய வேண்டும். இதனை மத்திய அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வருவதற்கு வடக்கு மாகாண சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது தொடர்பில் மாணவர்களை 70 புள்ளிகளிற்கு மேல் பெறுவதற்கு அனைவரும் இணைந்து முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் இவ் விடயம் தொடர்பில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.
  2. பள்ளிகளிற்கு மாணவர்கள் சுமையோடு செல்லுதல் தொடர்பில் உரிய சுற்றுநிருபம் உரியவர்களை சென்றடைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
  3. இந்தியாவிலிருந்து மீள நாட்டிற்கு திரும்பியுள்ள பல இளைஞர் , யுவதிகளிடம் ஆங்கிலம் தொடர்பில் அறிவுள்ளவர்கள், பட்டதாரிகள் பலர் காணப்படுவதனால் அவர்களை ஆசிரியர்களாக நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு.க.வ.கமலேஸ்வரன் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

     இவ்விடயம் தொடர்பில் ஆங்கில பாடத்தினை முதன்மை பாடமாக கொண்டவர்களை நியமிப்பது தொடர்பில் ஆரயப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

4. செவிப்புலனற்றோர் சார்பில் இரு வகையான சைகை முறைகளில் கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இதனால் சைகை மொழி மூலமான உரையாடலில் பிரச்சினைகள் ஏற்படுவதாக முறைப்பாடு கிடைக்கப்பெற்றதாகவும் இவ்விடயம் தொடர்பில் உரிய கவனம் செலுத்துமாறும் கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு.பா.கஜதீபன் அவர்கள் கேட்டுக்கொண்டார்.
5. முன்பள்ளி ஆசிரியர்களிற்கான கொடுப்பனவு உரிய தினங்களில் கிடைப்பதில்லை எனவும் கொடுப்பனவினை பெற்று வந்த சில ஆசிரியர்களிற்கு தற்போது கிடைப்பதில்லை என கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு.ரி.லிங்கநாதன் அவர்கள் தெரிவித்தார்.

   இவ்விடயம் தொடர்பில், முன்னர் முன்பள்ளி நிர்வாகங்களூடாக கொடுப்பனவு வழங்கப்பட்டு வந்ததாகவும் தற்போது நேரடியாக ஆசிரியரது வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்படுவதாகவும் வங்கிக் கணக்கு இலக்கத்தை சமர்ப்பிக்காத ஆசிரியர்களிற்கே கொடுப்பனவு கிடைக்கவில்லை. இந்நிலை சீர்செய்யப்படும் எனவும் செயலாளர் அவர்கள் தெரிவித்தார்.
6. தரம் III பாடசாலைகள் பலவற்றில் பெண் ஆசிரியர்கள் மட்டுமே கடமையாற்றி வருவதனால் பாடசாலை நடவடிக்கைகளில் பல கஷ்டங்களை அதிபர்கள் எதிர்நோக்குவதால் ஆண் ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு எம்.கே.சிவாஜிலிங்கம் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

- **கலாசாரம் தொடர்பாக**

   1. நல்லூர் பிரதேச சபையால் நடாத்தப்பட்ட கலாசார விழாவிற்கு கௌரவ மாகாண சபை உறுப்பினர்களிற்கு அழைப்பு விடுக்கப்படாமை தொடர்பில் 2016 ஆம் ஆண்டு விழாவில் இவ் விடயம் தொடர்பாக சுமுகமான முடிவு எட்டப்படும்

- **விளையாட்டு தொடர்பானது**

   1. விளையாட்டு தொழினுட்ப ஆலோசனைக் குழுக் கூட்டத்தை ஒவ்வொரு மாதமும் நடாத்துவது தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## 08.12.2015 ஆந் திகதிய அறிக்கையிலிருந்து எழும் விடயங்கள்

### ➢ விளையாட்டு தொடர்பானது

1. Colours Night வருட இறுதிக்கு முதல் வைப்பது சிறந்தது என்பதனால் 30.12.2015 ஆம் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**➢ பாடசாலை தரமுயர்த்தல்**

1. மு/தண்ணீரூற்று இந்து தமிழ்க் கலவன் பாடசாலை தரம் 10 ஆரம்பித்தல் – அறிக்கை கோரப்பட்டுள்ளது.
2. வ/பரக்கும் மகா வித்தியாலயத்தில் தரம் 01 ஆரம்பித்தல் – அனுமதிக்கப்படுகின்றது.

**➢ மீள ஆரம்பித்தல்**

1. யா/கோண்டாவில் இந்துக் கல்லூரியில் தரம் 01 மீள ஆரம்பித்தல் – 2017 ஆம் ஆண்டு ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டது.

**➢ புதிய பாடசாலை ஆரம்பித்தல்**

1. மன்னார் கணேசபுரம் இந்திய வீட்டுத் திட்டம் பகுதியில் ஆரம்பப்பிரிவு ஆரம்பித்தல் – அனுமதி வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

**➢ அதிபர் சேவை இடமாற்றம்**

அதிபர் சேவை இடமாற்றம் தொடர்பில் இடமாற்றப் பட்டியல் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு இடமாற்றம் தொடர்பான கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

**➢ தொண்டர் ஆசிரியர் நியமனம் தொடர்பானது.**

கல்வி அமைச்சு, இசுறுபாயவின் 23.10.2014 சுற்றறிக்கைப் பிரகாரம் தொண்டராசிரியர்களை ஆசிரியர்களாக நியமிக்க முடியாது. அவர்களும் ஆசிரியர் தொடர்பான நேர்முகப் பரீட்சைக்கு தோற்றி பதவியினை பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் இவ் விடயம் தொடர்பில் வட மாகாணத்திற்கு விசேட கவனம் செலுத்துமாறு அமைச்சினை கேட்கப்பட்டுள்ளதாகவும் செயலாளர் அவர்கள் தெரிவித்தார்.

**➢ வ/விபுலானந்த கல்லூரி அதிபர் நியமனம் தொடர்பில்**

கடந்த 09 மாதங்களாக அதிபர் பதவி வெற்றிடமாக உள்ளதாகவும் இச் சந்தர்ப்பத்தில் இரண்டு உயர்தர வகுப்பு ஆசிரியர்களிற்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகவும் கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு.சு.இந்திரராசா அவர்கள் கேட்டுக் கொண்டார்.

- இரண்டு ஆசிரியர்களும் நீண்டகாலம் தொடர்ச்சியாக கடமையாற்றிவருவதனால் வருடாந்த இடமாற்றத்தில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகவும் பதிலாக புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் செயலாளர் அவர்கள் தெரிவித்தார்.

- **கட்டடம் அமைத்தல்**

  1. யா/பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயத்தில் பழைமையான கட்டடம் ஒன்றை மாற்றி புதிய கட்டடம் அமைத்தல் – 28.12.2015 ஆம் திகதிய கூட்டத்தில் தீர்மானம் எட்டப்படும்.

- **கலாசாரம் தொடர்பாக**

  1. பண்டார வன்னியன் சிலை அமைப்பது தொடர்பில்
     முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள நினைவுக்கல் புனரமைப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

- **2015 ஆம் ஆண்டுக்கான TSEP, PSDG,CBG ஆகிய நிதி ஒதுக்கீடுகளின் மீளாய்வு**

  டிசம்பர் 2015 வரை 95% ஆன வேலைத் திட்டங்கள் நிறைவு பெற்றுள்ளன.

- **புத்தளத்தில் இயங்கும் வட மாகாணப் பாடசாலைகள் பற்றியது**

  வட மேல் மாகாண கல்வி அமைச்சின் செயலாளரிடம் மாகாண முதலமைச்சர், செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோருடனான கலந்துரையாடல் ஒன்றிற்கு ஏற்பாடு செய்து தருமாறு கேட்டுக் கொண்டுள்ளதாகவும் கௌரவ மாகாண கல்வி அமைச்சர் வெளிநாடு சென்றுள்ளதால் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் செயலாளர் அவர்கள் தெரிவித்தார்.

  - ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய 2016 இல் கையளிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கௌரவ மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

கௌரவ கல்வி அமைச்சர் அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் பிற்பகல் 01.30 மணியளவில் இனிதே நிறைவு பெற்றது.



**இ.இரவீந்திரன்**
செயலாளர்.

இ. இரவீந்திரன்
செயலாளர்
கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை,
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வட மாகாணம்